சுருக்கம்

மகளிர் திட்டம் – ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை வலுப்படுத்துதல் – தர மதிப்பீட்டில் தேர்ச்சி பெற்ற 3000 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ஊக்கத்தொகை தலா ரூ.1,00,000/– ஒப்பளித்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மஅதி–3) துறை

அரசாணை (நிலை) எண்.56 நாள்: 24.05.2010

திருவள்ளுவர் ஆண்டு 2041
வைகாசி – 10

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.113, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி3) துறை, நாள் 01.10.2009.
2. மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் நேர்முக கடித எண். 1213/டி1/2010 நாள் 05.05.2010.

*******

ஆணை:

படிக்கப்பட்டவை ஒன்றில் உள்ள அரசாணையில், கூட்டமைப்புகளை ஊக்குவிக்கும் அளவில் நிதி சார்ந்த முகவர்களாகச் செயல்படுத்துவதின் மூலம் தர மதிப்பீட்டில் தேர்ச்சி பெற்ற தகுதி வாய்ந்த 1000 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ரூ.1.00 இலட்சம் வீதம் ஊக்கத் தொகையாக ரூ.10.00 கோடி கடந்த 2009–10 ஆம் ஆண்டு ஒப்பளிப்பு செய்யப்பட்டு ஆணையிடப்பட்டது.

2. மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் 2010–11ம் நிதி ஆண்டில் சிறப்பாகச் செயல்படும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை ஊக்கப்படுத்தும் வகையில், தர மதிப்பீட்டில் தேர்ச்சி பெற்ற 3000 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ஊக்கத் தொகையாக தலா ரூபாய் ஒரு இலட்சம் அளிக்கப்படும் என அறிவித்துள்ளார். இதனைச் செயல்படுத்த ரூபாய் 30.00 கோடி நிதி தேவைப்படும் என தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

3. தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் இக்கூட்டமைப்புகளை ஊக்குவிக்கும் அளவில் நிதி சார்ந்த முகவர்களாகச் செயல்படுத்துவதின் மூலம் 1000 தகுதி வாய்ந்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு தலா ரூ.1.00 இலட்சம் வீதம் ஊக்கத் தொகையாக ரூ.10.00 கோடி கடந்த 2009–10 ஆம் ஆண்டு வழங்கப்பட்டது போன்று நடப்பாண்டிலும் இதனைத் தொடர்ந்து, மாநில அளவில் தரம் பிரித்து தகுதி வாய்ந்த 3000 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு தலா ரூ.1.00 இலட்சம் வீதம் ஊக்கத் தொகை வழங்கிட உத்தேசிக்கப்பட்டுள்ளது எனவும் இதற்காக ரூ.30.00 கோடி 2010–11 ஆம் ஆண்டில் செலவிடப்படும் என்றும், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் சுய உதவிக்குழுக்களுக்கு கடன் வழங்க இத்தொகையினைப் பயன்படுத்திக் கொள்ளலாம் எனவும் இந்த ஊக்கத்தொகை

மூலமாகக் கிடைக்கும் வட்டித் தொகை கூட்டமைப்புகளின் நிர்வாகச் செலவுக்கு மட்டும் செலவிட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

**4.** மேலும் அவர், இத்திட்டத்தினைச் செயல்படுத்தத் தேவைப்படும் ரூ.**30.00** கோடியை அனுமதித்தும் **2010–11** ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.**10.00** கோடியை விடுவித்தும் மேலும் ரூ.**10.00** கோடியை தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் சேமிப்பிலிருந்து பயன்படுத்திக் கொள்ள அனுமதியும், மீதமுள்ள ரூ.**10.00** கோடியை திருத்திய மதிப்பீட்டினை (RE/FMA 2010-11) எதிர்பார்த்து விடுவிக்குமாறும் கோரியுள்ளார்.

5. மேலும் அவர், அரசால் அனுமதிக்கப்பட்ட தொகை, **32** மாவட்டங்களில் செயல்படும் மகளிர் திட்ட செயலாக்க அலகுகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் எனவும், காலாண்டு முறைப்படி ஒதுக்கீடு செய்து வழங்கப்படும் தொகையை பயன்படுத்துவதில் காலதாமதம் ஏற்பட்டு, இத்திட்ட செயலாக்கம் பெரிதும் பாதிக்கப்படுமென்பதால், அரசு காலண்டு முறைப்படி ஒதுக்கீடு செய்து நிதி வழங்குவதில் இருந்து இவ்வினத்திற்கு விலக்களிக்குமாறும் அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

**6.** தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநரது மேற்கூறிய கருத்துருவினை அரசு மிகவும் கவனமுடன் பரிசீலித்து, பின்வருமாறு ஆணையிடுகிறது:-

1. அரசாணை (நிலை) எண்.**465**, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி–**3**) துறை, நாள் **23.7.2009–**ல் ஆணையிட்டபடி தகுதி பெற்ற தர மதிப்பீடு செய்யப்பெற்ற **3000** ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு தலா ரூ.**1,00,000/–** வீதம் ரூ.**30.00** கோடி (ரூபாய் முப்பது கோடி மட்டும்) அனுமதித்து ஆணையிடுகிறது.

2. மேலே **1–**ல் அனுமதிக்கப்பட்ட தொகையில் **2010–11**ம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.**10.00** கோடியை விடுவித்தும், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன சேமிப்பிலிருந்து ரூ.**10.00** கோடியை பயன்படுத்திக் கொள்ள அனுமதி அளித்தும் அரசு ஆணையிடுகிறது.

3. மேலே **2–**ல் அனுமதிக்கப்பட்ட தொகை அரசு காலாண்டு முறைப்படி ஒதுக்கீடு செய்யப்படுவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது.

4. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், மேலே பத்தி **6(2)**ல் விடுவிக்கப்பட்ட தொகையினைப் பெற்று தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்திற்கு காசோலையாக வழங்க இதன் மூலம் அதிகாரம் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

5. இதற்கான பயன்பாட்டுச் சான்றிதழை மாநிலக் கணக்காயர் / ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மற்றும் அரசிற்கு வழங்குமாறு தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. அரசு முதன்மைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அவர்கள், மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் அவர்களுடன் கலந்தாலோசித்து, வழிகாட்டு நெறிமுறைகளில் அவ்வப்போது நடைமுறையின் தேவைக்கேற்ப மாற்றம் செய்து கொள்வதற்கு இதன் மூலம் அதிகாரம் அளிக்கப்படுகிறது.

**7.** மேலே பத்தி **6(2)**ல் விடுவிக்கப்பட்டத் தொகை கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2235 – சமூக பாதுகாப்பும், நலனும்–02 சமூக நலன் –103 மகளிர் நலன் – பதினொன்றாம் ஐந்தாண்டின் திட்டப்பணிகள் – 02 மாநிலத் திட்டம் LY – ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கான ஊக்கத் தொகை–09 உதவித் தொகை 03 – குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை (DPC 2235-02-103-LY -0933)"

8. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு. எண்.339/செயலாளர் (செலவினம்)/2010, நாள் 14.05.2010–ல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. அஷோக் வர்தன் ஷெட்டி,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், சென்னை – 32.
ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, சென்னை – 15.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள், ()
அனைத்து திட்ட அலுவலர்கள், ()
(மகளிர் திட்டம்) ()
(மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் மூலமாக)
மாநிலக் கணக்காயர், சென்னை – 18.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை – 35.
நகல்:–
மாண்புமிகு துணை முதலமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 9.
நிதி (ஊரக வளர்ச்சி)த்துறை, சென்னை – 9.
அரசு முதன்மைச் செயலர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் தனிச் செயலர், சென்னை – 9.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (வரவு (ம) செலவு (ம) ஒருங்கிணைப்பு)துறை, சென்னை – 9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.